மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 161, திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**161—**

### இரயில்வே மேம்பாலம்

***207—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர், திருப்பாதிரிப்புலியூர் இரயில்வே மேம்பாலம் கட்டுமானப் பணிகள் எப்பொழுது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர், திருப்பாதிரிப்புலியூர் இரயில்வே மேம்பாலம் கட்டுமானப் பணிக்கு ஒப்பந்தக்காரர் தேர்வு செய்யப்பட்டு வேலை துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் இரயில்வே மேம்பாலத்திற்கான ஆரம்பக் கட்டப் பணிகள், திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த நேரத்தில் சுமார் 1 கோடி

2003 ஏப்ரல் 3]

ரூபாய் செலவில் நில ஆர்ஜிதப் பணிகள் முதலில் முடிவடைந்தன. பிறகு கழக அரசு மத்திய அரசை வலியுறுத்தியதன் காரணமாக இரயில்வே துறை அங்கே தங்களுடைய பணியாக அந்த மேம்பாலக் கட்டுமானப் பணிகளைத் தொடங்கியது. ஆனால் அதைத் தொடர்ந்து மாநில அரசினுடைய பங்காக அதனுடைய இணைப்புச் சாலைகளும், பாலத்திற்கான பிற வேலைகளையும் செய்ய வேண்டிய அந்தப் பணிகள் இப்போது தொடங்கப்பட்டு விட்டனவா? தொடங்கப் பட்டிருக்குமேயானால் எப்போது அவை முடிவடையும்? அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்கிற விவரங்களை அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட மேம்பாலப் பணிக்காக ரூ.1,400 இலட்சத்திற்கு 5-10-2000-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான தொழில்நுட்ப களப் பணிகள் முடித்து தேவையான வடிவமைப்புகள் தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு மற்றும் ஆய்வு அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ளன. இப்பணிக்கு தொழில்நுட்ப அங்கீகாரம் ரூ. 1,540 இலட்சத்திற்கு 1-11-2002 அன்று வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பரிசீலனை செய்து குறைந்த தொகை கோரிய திருவாளர்கள் பி & சி கட்டுமான நிறுவனத்திடம் அவர்களுடைய மாற்று வடிவமைப்பின்படி பணியைச் செய்து முடித்திட 27-2-2003 அன்று ஒப்படைக்கப்பட்டது.

ஒப்பந்தக்காரரிடம் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்படி இப்பணி 26-2-2005-க்குள் முடிக்கப்பட வேண்டும். மேற்கண்ட மேம்பாலப் பணிக்கான வேலை தளம் 27-2-2003-ல் ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டு அன்று முதல் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. பாலத்தின் ஒவ்வொரு தூணின் அடித் தளத்தில் மண்ணின் வகையினை உறுதிப்படுத்துவதற்கு ஆழ்துளை இயந்திரங்கள் மூலம் துளையிடப்பட்டு மண் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அது முடிவடையும் தருவாயில் உள்ளது. மேலும் துளையிட்ட கீழ் தூண் அடித் தளம் அமைப்பதற்கான சோதனை அடித் தள கான்கிரீட் தூண்கள் test piles இரண்டு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் தாங்கும் திறன் அறிவதற்காக பளு ஏற்றி சோதனை செய்யப்பட உள்ளது. ஒப்பந்தக்காரரிடமிருந்து மாற்று வடிவமைப்பு விவரங்களும், வரைபடங்களும் பெறப்பட்டுள்ளன. தலைமைப் பொறியாளர் வடிவமைப்பு மற்றும் புலன் ஆய்வு, சென்னை

அவர்களிடமிருந்து அவற்றிற்கான ஒப்புதல் பெறப்பட்டவுடன் கட்டுமான வேலைகள் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெறும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாக கடலூர் மக்களுடைய முக்கியக் கோரிக்கையாக இருக்கின்ற அந்த மேம்பாலப் பணிகளில் சாலையில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது என்பது அடிப்படையான ஒன்றாகும். அந்த வகையில் இப்போது கடலூர் - சிதம்பரம் சாலையிலிருந்து கடலூர்-வண்டிப்பாளையம் போகின்ற அந்தச் சாலையை இணைப்பதற்கு ஏற்ற வகையில் அந்தப் பாலம் இப்போது அமைக்கப்படுகிற சூழல் இருக்கிறது. அந்தப் பாலத்தையொட்டி அருகில் பேருந்து நிலையம் இருக்கிறது. ஆக, பாலத்திலிருந்து கிளைப் பாதையாக பேருந்து நிலையத்திற்கும் வழிநிலை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பது அவ்வூர் மக்களுடைய கோரிக்கையாகும். அதை அரசு செய்து தர முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த பஸ் நிலையத்திற்குண்டான அணுகுசாலை அமைக்கும் பணி ஆய்வு செய்யப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 162, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**162—**

## வேகத் தடை

**•16759—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—